விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 326 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 24 வெள்ளிக்கிழமை (10.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

வலம்புரி அலுவலகம்
திறப்பு விழா
காலம் : 10.11.2023
(வெள்ளிக்கிழமை)
மு.ப 10.00 மணி
இடம் : இல.191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

### யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தையடுத்து

# சுவஸ்திகாவுக்கு ஆதரவான அறிக்கையை வாபஸ் பெற்ற பல்கலை ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கத்துக்கு ஆதரவாக வெளியிட்ட அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில்களை மூடி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகாவுக்குச் சார்பாக வெளியிட்ட அறிக்கையை வாபஸ் பெற்றது.

சட்டத்தரணி சுவஸ 15



# நீதித்துறை தொடர்பில் சந்தேகம் வேண்டாம்

### பாராளுமன்றில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

நாட்டின் நீதித்துறை தொடர்பில் பொதுமக்கள் சந்தேகம் கொள்ள வேண்டாம் என நீதித்துறை அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்துக்கு எதிரான தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் வெடித்தது சட்டத்துறையில் தீப்பொறியாக 04

### தீபாவளியை முன்னிட்டு

## வடக்கு - கிழக்கு பாடசாலைகளுக்கு

### விடுமுறை வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை விசேட விடுமுறை வழங்குமாறு வட மாகாணத் தமிழாசிரியர் சங்கம் கோரிக்கை 15

## தும்பளையில் நலன்புரி பணம் பெறச் சென்றவர்

### மயங்கி விழுந்து மரணம்

(கரணவாய்)

நலன்புரித் திட்டப் பணம் பெறுவதற்காக சென்ற குடும்பப் பெண் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

கற்கோவளத்தைச் சேர்ந்த கமலேஸ்வரி அமிர்தலிங்கம் (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

அவர் நேற்று வியாழக்கிழமை முற் 15

### கிளிநொச்சியில் பெண் படுகொலை

## 9 வருடங்களின் பின்னர் குற்றவாளிக்கு மரண தண்டனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் பெண் ஒருவரை கொலை செய்த குற்றவாளிக்கு ஒன்பது வருடங்கனின் பின்னர் நேற்று கிளிநொச்சி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது

கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் கடந்த 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி மாத்தளை பகுதியைச் சேர்ந்த இராஜசுலோஜனா என்ற பெண்ணை கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்ட நிலை 15

### புதிய விளையாட்டு சட்டமூலம்

## நிபுணர் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

விளையாட்டுச் சட்டத்திற்குப் பதிலாக புதிய விளையாட்டுச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை குழுவின் தலைவர் ஜகத் பெர்னாண்டோவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எதிர் காலத்தில் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு முறையான வரைவு 15

## கிரிக்கெட் நிறுவன அதிகாரிகள் பதவி விலக வேண்டும்

### சபையில் பிரேரணை நிறைவேற்றம்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் நிறுவன அதிகாரிகள் பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை ஆளுங்கட்சி வழிமொழிந்ததையடுத்து, அப்பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நேற்று முன்தினம் ஆற்றிய உரையைத் தொடர்ந்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 04

## அல்வாயில் சடலமாக மீட்கப்பட்ட பெண் படுகொலை

### பகுப்பாய்வு அறிக்கையில் தகவல் மூவர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

அல்வாயில் வீட்டில் தனிமையில் இருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட மூதாட்டியின் உயிரிழப்பு கொலை என பகுப்பாய்வு அறிக்கை கிடைத்தமையை அடுத்து மூவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அல்வாய் கிழக்கு, அல்வாயைச் சேர்ந்த பழனிப்பிள்ளை தில்லை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.
தியாகராஜா அற்புதராஜா
B.A, B.Ed, PGDE, M.Ed, SLPS-III



திருமதி.
ஜெனிஸ்ரெலா தோமஸ் எடிசன்
NDT, B.A, B.Ed, M.Ed, SLPS-III



திருமதி.
இஸ்வேதா டர்சினி ஹென்றி
Spl.Trd.in Science, B.Ed, M.Ed, SLPS-III

04.11.2023 அன்று இலங்கை அதிபர் சேவை III இற்கான நியமனத்தைப் பெற்றுக் கொண்ட எமது பாடசாலையின் ஆசிரியப் பெருந்தகைகளை பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் கல்வித்துறையில் பல பதவி உயர்வுகளைப் பெற்று சேவையில் சிறந்து விளங்க இறைவனின் அருளாசிகளை வேண்டுகின்றோம்.

Best Wishes!

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்
யா/கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்

(17813)

---

# மாபெரும் மலிவு விற்பனை

## தீபாவளியை முன்னிட்டு

விசேட விலைக்கழிவு
(5%-50%)

**Model Frock** ரூபா 600/= முதல்

## TODAY SELECTION

No-150, குளப்பிட்டி சந்தி, கொக்குவில்
(மக்கள் வங்கி எதிரில்)

(17014)

**077 351 4774**

---

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

---

# Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 275/= | (max 1 Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 440/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 295/= | (max 2 Kg) |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg அரிசி மா | - 189/= | |
| 1 Kg கோதுமை மா | - 181/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 188/= | |
| 400g அங்கர் பால்மா | - 1025/= | ~~(1080/=)~~ |
| 70g பேபி சோப் | - 108/= | ~~(145/=)~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 800/= | ~~(830/=)~~ |
| 01 சந்தூர் சோப் | - 140/= | ~~(175/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | ~~(430/=)~~ |
| 01 லக்ஸ் சோப்-றோஸ் | - 145/= | ~~(175/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 275/= | ~~(330/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/=)~~ |
| 400g சஸ்ரயன் (Sustagen) | - 3400 /= | ~~(3900/=)~~ |

1025/=




~~1080/-~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(17825)

---

# நினைவு வணக்க நிகழ்வு அழைப்பு



அன்புடையீர்!
21.09.2023 (வியாழக்கிழமை) அன்று கனடாவில் இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் கார்த்திகேசு நாகலிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் நினைவு வணக்க நிகழ்வு எதிர்வரும் 11.11.2023 (சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் அந்நிகழ்வில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

இல.111, D 10,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

(17806)

இங்ஙனம்
குடும்பத்தினர்

---

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 12.10.2023 வியாழக்கிழமை அதிகாலை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் சிவசோதி சாம்பசிவம்

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (10.11.2023) வெள்ளிக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(17815)

131/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆயிரம் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தயார்

## பாரிய வீழ்ச்சியடையவுள்ள சுகாதாரத்துறை

**(கொழும்பு)**

**இலங்கையிலிருந்து 5 ஆயிரம் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற தயாராகவிருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித்த அலுத்கே தெரிவித்துள்ளார்.**



நாடளாவிய ரீதியாக முன்னெடுத்த ஆய்வுகள் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

5 ஆயிரம் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் பட்சத்தில் நாட்டின் சுகாதாரத் துறை பாரிய வீழ்ச்சி அடையும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே வைத்தியர்களின் தேவைகளைக் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5-6)

## ஜேர்மனியின் சொகுசுக்கப்பல் நாட்டிற்கு

(கொழும்பு)

ஜேர்மனியின் "ஜடபெல்லா" சொகுசு பயணக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த கப்பல் 2008 பயணிகள் மற்றும் 633 பணியாளர்களுடன் வந்தடைந்துள்ளது.

ஜடபெல்லா, அதன் செழுமை மற்றும் உயர்தர வசதிகளுக்காக புகழ் பெற்றது.

ஆடம்பரமான தங்குமிடங்கள், பொழுதுபோக்குகள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த உணவுகளுக்கும் இக்கப்பல் பெயர்பெற்றது. (நி-5-6)

## வடக்கில் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு- பிரதமர் உறுதி

(கொழும்பு)

வடமாகாண மக்கள் அனுபவித்து வரும் பாரிய குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன உறுதியளித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வில் நேற்று முன்தினம் உரையாற்றிய பிரதமர்,

வடக்கிற்குள் நிலவும் நீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் "யாழ்ப்பாண நதி" என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த பொறியியலாளர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டினார்.

ஒட்டுமொத்தமாக, எங்கள் பாரம்பரியத்திற்கு ஏற்ப தண்ணீர் பிரச்சனையை கையாள்வது குறித்து நாங்கள் ஆலோசித்து வருகிறோம். மேலும், கடல்நீரில் இருந்து நன்னீரைப் பெறுதல் திட்டம் மூலம் நீர் வழங்கும் போது நுகர்வோர் அதிக கட்டணம் செலுத்த வேண்டியிருப்பதால், தற்போதுள்ள 40,000 ஏரிகளை மேம்படுத்தவும், மழைநீர் சேகரிப்பு, கடலில் கலக்கும் ஆற்றுநீரை சேகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார். (நி-5-6)



## சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் தொழிற்கல்வியினை நிறைவு செய்த பயிலுநர்களிற்கான என்.வி.கியூ சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர் வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாண கலாசார மையத்தில் நடைபெறவுள்ளது. (நி-5-6)

## நயினை அம்மன் ஆலயத்தில் வேட்டியுடன் சீனத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கி சென் ஹொங் தலைமையிலான குழுவினர், நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயிலுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதன்போது சீன தூதுவர் கி சென் ஹொங், சைவசமய முறைப்படி வேட்டி அணிந்திருந்தார்.

இதே வேளை நயினாதீவிலுள்ள மக்களுக்கு சீன அரசின் உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைத்த சீன தூதுக்குழுவினர் அதன் பின்னர் சிவில் சமூகத்தினர், புத்திஜீவிகள் மற்றும் வர்த்தக சமூக பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (நி-5-6-33)


5 ஆம் ஆண்டு நினைவேந்தல்

இம்மைக்கு 1936 – 11 – 08



அம்மைக்கு 2018 – 11 – 05

பண்டிதர் திரு.சிதம்பரப்பிள்ளை வேலாயுதம்

(ஓய்வுநிலை அதிபர்)

(திதி: ஐப்பசித் திங்கள் அபரபக்க திரயோதசி)

எம் கனவை உம் கனவாய்
காலமெலாம் நினைத்தீரப்பா
எம் அகம் முழுதும் அமர்ந்திருந்து
காலம் வரை நிலைப்பீரப்பா

(17817)

'திருத்தணிகை', வதிரி,
கரவெட்டி.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதித்துறை...

எரியும் ஒன்றாகும்.

தனிமைப்படுத்தப்பட்ட சம்பவம் ஒன்றின் காரணமாக நீதித்துறை தொடர்பில் சந்தேகங்களை எழுப்ப வேண்டாம் இங்கு சட்டமன்றத்திற்கும் நீதித்துறைக்கும் இடையே எந்த முரண்பாடும் இல்லை.

இங்கு சட்டமன்றத்திற்கும் நீதித்துறைக்கும் இடையே மோதல் இல்லை. அத்தகைய பரிந்துரை எதுவும் இல்லை. கட்சி பேதமின்றி பாராளுமன்றம் தீர்மானம் எடுத்துள்ளது. பொது கருத்துடன் உடன்படுங்கள். மக்கள் கருத்து பாராளுமன்றத்தில் எதிரொலித்தது.

ஒரு நீதிமன்றம் வழங்கிய உத்தரவு குறித்து சில கருத்துகள் உள்ளன. இது நிறைவேற்று அதிகாரத்திற்கும் நீதித்துறைக்கும் இடையிலான மோதலாக விளங்கக்கூடாது என நம்புகிறேன் என்றார். (ம-7)

## கிரிக்கெட்...

நேற்று இந்த பிரேரணையை முன்வைத்தார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தற்போதைய தலைவர் உள்ளிட்ட சபை உறுப்பினர்கள் உடனடியாக பதவி விலக வேண்டும் என இந்த பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கிரிக்கெட் நிர்வாகத்திற்கான புதிய ஏற்பாடுகள் அடங்கிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இது தொடர்பான பிரேரணையை உறுதிப்படுத்தினார்.

இதனிடையே, இலங்கை கிரிக்கெட் நிறுவனம், சர்வதேச கிரிக்கெட் பேரவையுடன் கலந்துரையாடிய்தாக தகவல் கிடைத்துள்ளதால், அதற்கு முரணாக செயற்படக்கூடாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

# நியூசிலாந்து வெற்றி




2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 41ஆவது போட்டி நேற்று இடம்பெற்றது.

குறித்த போட்டியில் இலங்கை மற்றும் நியூஸிலாந்து ஆகிய அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 46.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 171 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக குசல் ஜனித் பெரேரா 51 ஓட்டங்களையும், மகீஷ் தீக்ஷன 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில், நியூஸிலாந்து அணியின் டிரெண்ட் போல்ட் 37 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 172 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 23.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில் அதிகபடியாக, டெவோன் கொன்வே 45 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில், இலங்கை அணியின் அஞ்சலோ மத்யூஸ் 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். ஆட் நாயகனாக டிரோன்ட் போல்ட் தெரிவானார். (ம-7)

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7593)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
(C-7593)
VISA
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையின் பொருளியல் பாட ஆசிரியர்
திருமதி கல்யானி வசீகரன்
B.A(Hons),P.G.D.E, MED,S.L.P.S III
அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் III இல் பதவியுயர்வு பெற்றுள்ளதையிட்டு அவரை மனதாரப் பாராட்டுவதுடன் அவரின் பணி மென்மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
(17824)

பொதுக் கூட்டம்
எமது சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 03.12.2023 ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.அக்கூட்டத்தின்போது 2018,2019, 2020ஆம் ஆண்டுக்குரிய கணக்காய் அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட உள்ளன.அக்கணக்கறிக்கைகளின் சாராம்சத்தை எமது பால் விற்பனைக்கிளை நிலையங்களில் காட்சிப்படுத்தியுள்ளோம். அவற்றை ஆர்வமுள்ளவர்கள் பார்வையிடலாம் என்பதையும் தங்களுக்கு அறியத் தருகின்றோம்.ஏதேனும் பிரேரணைகள் இருப்பின் 16.11.2023 ம் திகதிக்கு முன் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.
செயலாளர்
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம்
கரவெட்டி
(C-7592)

அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு
கடந்த 09.10.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர் பரஞ்சோதி சௌந்தரேஸ்வரி



அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 10.11.2023 வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய ரவிச்சந்திர சர்மா பலநோக்கு மண்டபத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தகவல்:
திரு.திருமதி ஜோதீஸ்வரன் வாசுகி
திரு.திருமதி நித்தியஜோதி பிரியவர்சினி
திரு.திருமதி சுபாஷ் கஸ்தூரி
திரு.திருமதி வசீகரன் கவிதா
திரு.திருமதி பரந்தாமன் ஜெயந்தினி
சௌந்தர்யம்,
வதிரி.
(C-7591)

காணி விற்பனைக்கு உண்டு
GOLDEN Real Estate
யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 42 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீரூற்று
- வடமாகாண சபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- 18 அடி பாதை
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6 km தூரம்
- நல்லசூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணிவீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- பரம்பரைக்காணி, பல வருடகால தோம்பு, தூய உறுதி
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 06.00 - மாலை 06.00 மணிவரை
(17826)
077 623 4204
076 755 8606

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

எது நடந்தாலும் நீதித் துறையின் சுயாதீனத்தை பாது காக்க அர்ப்பணிப்புடன் செயற் படுமாறு அனைத்து தரப்பின ரிடமும் இலங்கை சட்டத்தர ணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டத்தின் இறையாண் மையைப் பாதுகாப்பதற்கு நீதித்துறையின் சுதந்திரம் இன்றியமையாததாகும் என் பதை இலங்கை சட்டத்தரணி கள் சங்கம் எப்போதும் கருது வதாக அந்த அறிவிப்பில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் இடை க்கால குழு தொடர்பான வழக்கு குறித்து அமைச்சரவை அமை ச்சர் ஒருவர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் முன் வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு சட்டத்தரணிகள் சங்கம் இதனை தெரிவித்துள் ளது.

சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளின் உண்மை மற்றும் பொய்மையை விசாரணை செய்வதற்கு பக்கச்சார்பற்ற மற்றும் சுயாதீனமான நபர் களை நியமிக்க வேண்டும் எனவும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

குற்றச்சாட்டுக்கள் உண் மையாக இருக்குமானால் அது இலங்கையின் நீதித்துறை மீதான நம்பிக்கையை சீர் குலைத்துவிடும் என சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் இந்தக் குற்றச் சாட்டுகள் பொய் என நிரூபிக் கப்பட்டால் நீதிமன்ற அவ மதிப்புக் குற்றச்சாட்டுக்கு உள் ளாக வேண்டும் என அந்த அறிவிப்பில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (நி-5-6)

# லொத்தர் டிக்கெட்டுகளில் சட்டவிரோத பந்தயம்

## தேசிய லொத்தர் சபை எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபை டிக் கெட்டுகளை அடிப்படையாக வைத்து நடத்தப்படும் சட்ட விரோத நடவடிக்கை தொடர் பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது.

இது தொடர்பில் தேசிய லொத்தர் சபை விடுத்துள்ள அறிவிப்பில்,

தேசிய லொத்தர் சபை டிக் கெட்டுகளின் ஊடாக சட்டவிரோத பந்தய நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

தமது டிக்கெட்டுகளின் இறுதி இலக்கங்களை அடிப்படையாக வைத்து, இந்த சட்டவிரோத பந்தயம் நடத்தப்பட்டு வருகி ன்றமை குறித்து தகவல் கிடை த்துள்ளது.

இதன்படி, இந்த சட்ட விரோத பந்தயத்தில் ஈடுபடு வோர், ஒத்துழைப்பு வழங்கு வோர் மற்றும் அதனுடன் தொடர்புபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என எச்சரித்துள்ளது.

எனவே இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடு படுவதை தவிர்த்துக் கொள் ளுமாறு தேசிய லொத்தர் சபை அறிவுறுத்தியுள்ளது. (நி-5-6)

# சட்டத்தை மாற்றாமல் கிரிக்கெட்டை முன்னேற்ற முடியாது-மரிக்கார் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

விளையாட்டுச் சட்டத்தை மாற்றாமல் இலங்கை கிரிக்கெட்டை முன்னேற்ற முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரை யாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

விளையாட்டுச் சட்டத்தை மாற்றிய மைக்காமல், இலங்கை கிரிக்கெட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது.

இதற்குள் அரசியலும் மூக்கை நுழை க்கிறது. கிராமத்தில் உள்ளவர்களும் கிரிக்கெட் அணிக்குள் நுழையும் வாய் ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண் டும் என அவர் மேலும் தெரிவித்துள் ளார். (நி-5-6)

# மீண்டும் அதிகரித்துச் செல்லும் அமெரிக்க டொலரின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலரின் பெறுமதி மீண் டும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், இலங்கை மத்திய வங்கி நேற்று வெளி யிட்டுள்ள நாணய மாற்று விகிதங்க ளின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 333.63 ரூபாவாகவும் கொள் வனவு விலை 323.15 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற் பனை விலை 243.52 ரூபாவாகவும் கொள்வனவு விலை 232.73 ரூபா வாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 359.26 ரூபாவாகவும் கொள் வனவு பெறுமதி344.50 ரூபாவாகவும்பதி வாகியுள்ளது. அதேசமயம், ஸ்டெர் லிங் பவுண்டின்விற்பனை பெறுமதி 411.39 ரூபா வாகவும் கொள்வனவு பெறுமதி 395.84 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-5-6)


## யாழ்ப்பாணம் மாநகராட்சிமன்றம் பகிரங்க ஏலவிற்பனை

யாழ்.மாநகரசபையின் பின்வரும் பொருட்களுக்கான பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் **2023.11.16 ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு** மாநகர சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. ஏலத்தில் பங்குபெற விரும்பின் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக **ரூபா 575.00 (வரியுடன்)** இனை செலுத்தி ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

1. பழைய இரும்புகள்
2. கழிவு ஒயில்
3. வெற்று தார் பரல்
4. விறகு

ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி-7589)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் நூலக ஆசிரியை
திருமதி.
கவிதா தேவகாந்தன்
(B.A (Hons), PGDE, PGD in Lib & Inf.Sci, Dip in HRM, M.Ed.)

அவர்கள் 04.11.2023 அன்று இலங்கை அதிபர் சேவை தரம்-3 (SLPS-3) இற்கான நியமனத்தை ஏற்றுப் பதவியுயர்வு பெற்றுள்ளார். இவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவிகளைப் பெற்று சேவையில் சிறந்து விளங்க வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.




(C-7588)

வாழ்த்துவோர்:
ஆசிரியர் கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.


# இராசிபலன்

10.11.2023
ஐப்பசி 24, வெள்ளிக்கிழமை
துவாதசி பிற்பகல் 12.55 மணிவரை

அத்தம் பின்னிரவு 12.56 மணிவரை
சுபநேரம் 6.05 -7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
பிரகோஷ விரதம், அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்
சதயம், பூரட்டாதி

வளவன்




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கடன்களை விடுவிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்லவர்களின் அறிவு ரையும் ஆதரவும் கிடைக்கும்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், கனி வாக பேசி காரியம் சாதிப்பீர்கள், நிதி நிலை உயரும் நாள், நேற்றைய பிரச் சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம்.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், புண்ணிய காரியங்க ளிற்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்ற ங்களினால் ஏற்றம் பெறுவீர் கள்.




ஏட்டிக்குப் போட்டி யாக இருந்தவர்கள் மனம் மாறுவார், வழிபாட்டால் மக த்துவம் காண வேண்டிய நாள், திடீர்ப் பயணங்கள் இடம் பெறலாம்.




வழிபாட்டால் மகத்து வம் காண வேண்டிய நாள், பிள்ளைகளின் வழியில் சுப செல வுகள் ஏற்படலாம், அரசு வழியில் அனுகூலம் உண்டு.




குடும்பத்தில் குதூ கலம் அதிகரிக்கும் நாள், பேச்சில் துணிவு பிறக்கும், வழிபாட் டால், இன்பங்கள் கூடும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்




வழிபாட்டில் ஆர் வம் கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், விருந்தினர்கள் வருகை யுண்டு, காரிய அனுகூலமுண்டு.




மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல் லது, கோபத்தை குறை த்து கொள்ள வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், உடல் நல னில் கவனம் தேவை.




பொதுக்காரியங்க ளில் ஆர்வம் காட்டு வீர்கள், தொலை பேசி வழியில் பொன் னான செய்திகள் வந்து சேரலாம். இயல்பான வாழ்க்கையில் இன் பங்கள் கூடும் நாள்.




பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரி க்கைகள் நிறை வேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி கள் கைகூடும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், செய ற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர் கள்.




மனதிற்கினிய சம்பவங் கள் நடைபெறும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், காரிய அனுகூலமுண்டு, வரு மானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

சத்தமிட்டு சிரிக்க வைப்பதும் சத்தமேயில்லாமல் அழ வைப்பதும் ஒரு சிலரே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கின் அபிவிருத்திகளுக்கான ஆதரவினை பெற்றுத் தருவோம்

## வெளிநாடுகளுக்கான உயர்ஸ்தானிகர்கள்

(யாழ்ப்பாணம்)

**வடக்கின் அபிவிருத்திக்காக தாம் கடமை புரியும் நாடுகளின் ஆதரவை பெற்று தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம் என வெளிநாடுகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உயர்ஸ்தானிகர்கள் தெரிவித்தனர்.**



வெளிவிவகார அமைச்சினால் புதிதாக நியமிக்கப்பட்ட வெளிநாடுகளுக்கான உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் வடக்கிற்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்த போது வடமாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸை கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

வடமாகாண மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்பும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்கள் மற்றும் புதிய ஆணையாளர்களின் ஆதரவைப் பெறும் நோக்குடன் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி பயணிகள் படகு சேவைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டமை, எதிர்காலத்தில் மன்னாருக்கும் இந்தியாவிற்கும் இடையிலான படகு சேவைத்திட்டங்கள், மீன்பிடி, விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதார நடவடிக்கைகள் போன்றவை பற்றியும் வடக்கின் வளங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் செய்யக்கூடிய சாதகமான, ஆக்கபூர்வமான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

வடமாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அந்தந்த நாடுகளிடமிருந்து அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக புதிதாக நியமிக்கப்பட்ட தூதுவர்கள் உறுதியளித்தனர். (நி-5-6-33-104)



**தேசிய மட்டத்தில் சாதனை படைத்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி நாடகக் குழுவினரைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரிச் சமூகத்தின் ஏற்பாட்டில் நேற்று பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.**

**(படம்-சிவசாந்தன்)**

# வீதிகளில் கொட்டப்படும் குப்பைகளால் அசௌகரியம்

(கரணவாய்)

கழிவுப் பொருட்களை வீதியோரங்களில் கொட்டுவதனால் அவ்வீதிக்கு அருகாமையில் வசிக்கும் மக்கள் மற்றும் குறித்த வீதியூடாக பயணிப்போர் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

கரணவாய் மேற்கு அந்தரான் ஜே/ 349 கிராம சேவையாளர் பிரிவில் குடியேற்றத் திட்டத்தில் உள்ள வீட்டுக்கு அருகாமையில் கழிவுப் பொருட்களை கொட்டுவதனால் துர்நாற்றம் வீசுவதோடு மழைக்காலம் ஆரம்பித்ததால் குறித்த கழிவுப் பொருட்கள் அருகில் உள்ள கால்



வாயில் தேங்கி உள்ளது.

இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (நி-5-6-60)

## ஆண்டு விழாவும் கலை நிகழ்வுகளும்

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வாலிபத் தீபாவளிக் கொண்டாட்டமும் நாளை மறுதினம் மாலை 5.31 மணி முதல் இளவாலை புனித ஹென்ரியரசர் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாணவேடிக்கைகள், நடன நாட்டிய நிகழ்வுகள், கௌரவிப்பு நிகழ்வுகள் மற்றும் "யாழ் ரியூன்ஸ்" இசைக்குழுவின் இசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-5-6)



# விண்ணப்பங்கள் கோரல்

சட்டமாணி சிறப்புப் பட்டப்படிப்பு 2023/2024 கற்கைநெறிக்கு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் குறித்த கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 29/11/2023இற்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு யாழ். பிராந்திய தொலைபேசி இலக்கத்திற்கு 021222 3374 தொடர்பு கொள்ள முடியும். (நி-5-6)

பட்ட மேற்கல்வி டிப்ளோமா 2023/2024 கற்கை நெறிக்குஇலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் குறித்த கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 30 .11. 2023 முன்னர் இணையவழி ஊடாக(www.oulack) விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் (021-2223374) எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ள முடியும் (நி-5-6)

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக வடமராட்சி தெற்கு, மேற்கு. கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலாசார மத்திய நிலையத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான பயிற்சி நெறிகளான சங்கீதம், பரதநாட்டியம், சித்திரம், நாடகமும் அரங்கியலும், வயலின் மிருதங்கம், ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவை யினை 2023/11/20 ஆம் திகதிக்கு முன்பாக கலாசார மத்திய நிலையம் 15 ஆம் கட்டை உடுப்பிட்டி தெற்கு உடுப்பிட்டி என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம்.

நேர்முகத் தேர்வுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும். என உடுப்பிட்டி கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி செல்வி.எஸ்.ராசமலர் அறிவித்துள்ளார். (நி-5-6)

தென்மராட்சி பிரதேச கலாசார மத்திய நிலையமானது 2024ஆம் ஆண்டுக்கான இசை, நடனம், சித்திரம், நாடகம் மற்றும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பயிற்சி நெறிகளுக்கான வளவாளர்களை நியமிக்கும் பொருட்டு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரங்கள், தகைமைகள், தொலைபேசி இலக்கம் ஆகியன அடங்கிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 19.11. 2023ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியவாறு நிலையப்பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம் - தென்மராட்சி, குடமியன், வரணி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி கலாசார மத்திய நிலையம் பொறுப்பதிகாரி ஜெ.கிரிதரன் அறிவித்துள்ளார். (நி-5-6)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கான செயலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகமும் தென்மராட்சி பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டு பெருவிழா தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம்-கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் இனப்படுகொலையை உலகம் ஏன் இன்னும் ஏற்கவில்லை?

## பாலஸ்தீன பத்திரிகையாளர் கேள்வி

**(ஜெருசலேம்)**

**2009 இல் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் இன்றுவரை அவர்களின் துயரத்தினை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவில்லை. ஏன் இனப்படுகொலை என்ற வகைப்படுத்தலிற்குள் கூட சேர்க்கப்படவில்லை என பாலஸ்தீன பத்திரிகையாளர் ஹெப் ஜமாஸ் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.**

பாலஸ்தீனியர்கள் இனப்படுகொலை தனித்துவமானது இல்லை என்பதை தற்போது அதிகளவிற்கு நான் உணர்கின்றேன்.

எந்த வகையிலும் நாங்கள் விசேடமானவர்கள் இல்லை.

2009 இல் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் இன்றுவரை அவர்களின் துயரத்தினை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவில்லை. சீற்றம் மட்டும்போதாது என்பதை வரலாறு எமக்கு கற்றுத்தந்துள்ளது. அனுதாபம் மாத்திரம் போதாது.

எங்கள் மக்கள் உலகம் முழுவதும் படுகொலைகளை எதிர் கொள் கின் றனர். உண்மை என்ன வென்றால் பெரும்பான்மையான மக்கள் இனப்படுகொலையை இடைநிறுத்துவதற்காக தங்கள் வாழ்க்கையை சில நிமிடங்கள் இடைநிறுத்திக்கொள்ள மாட்டார்கள். பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டாலும் பாலஸ்தீன மக்கள் தப்பிப் பிழைப்பார்கள், நாங்கள் சுதந்திரத்தை தவிர வேறு எதனையும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

எங்கள் வாழ்நாளில் அதனை பார்க்க முடியாமல் போனால் கூட அதனை தவிர வேறு எதனையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

இஸ்ரேலிற் குஜேர் மன் அரசாங்கம் இராணுவ உதவியாக நவம்பர் 2 ஆம் திகதி 300 மில்லியன் யூரோக்களை அனுப்ப இணங்கியுள்ளது. 2022 இல் இஸ்ரேலிற்கான இராணுவ உதவி 32 மில்லியனாக காணப்பட்டது.



பாலஸ்தீனியர்களின்படுகொலையை மேலும் அதிகரிக்க கடந்த ஆண்டு வழங்கிய தொகையை விட தற்போது அதிக தொகையை வழங்குகின்றனர் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## வாகன இறக்குமதி இடைநிறுத்தம்

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கான வாகன இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

குறித்த வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட ஒரு மாத கால அவகாசம் நிறைவுக்கு வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனுமதி வழங்கப்பட்ட மாதத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை விடுவிக்க சந்தர்ப்பம் வழங்குவதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதி தொடர்பான அறிக்கையை தயாரிப்பதற்காக ஜனாதிபதி செயலகம் விசேட குழுவொன்றை நியமித்துள்ளது.

வாகனங்களின் தேவை, எரிபொருள் செலவு, வாகன இறக்குமதிக்கான பரிவர்த்தனை என்பன குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## நாட்டின் வளங்களை விற்று ஏப்பமிடும் ரணில்- ஓமல்பே

(கொழும்பு)

இலங்கையிலுள்ள வளங்களை விற்று ஏப்பமிடும் முயற்சிகளை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசாங்கம் மேற்கொள்வதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கண்டி மற்றும் நுவரெலியாவில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க தபால் நிலையங்களை விற்பனை செய்யும் இலங்கை அரசாங்கத்தின் திட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே ஓமல்பே சோபித்த தேரர் இந்த விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

நாட்டின் வளங்களை விற்பதன் மூலம் தமது விரும்பங்களை நிறைவேற்றவே இலங்கை அரசாங்கம் முயற்சிப்பதாக அவர் தெரிவித்தார்.

மீண்டும் தமக்கு அரசியல் அதிகாரத்தை ருசிப்பதற்கு வாய்ப்பு கிடைக்காது என்பது ஜனாதிபதி தலைமையிலான தற்போதுள்ள அரசாங்கத்திற்கு தெளிவாக தெரியும்.

நாட்டின் அனைத்து வளங்களையும் விற்று, அதன் மூலம் இலாபம் மற்றும் பயன்களை பெறுவது மாத்திரமே அவர்களின் ஒரே நோக்கம் எனவும் அவர் சாடியுள்ளார். (நி-5-6)

## நுவரெலியா தபால் நிலையத்தை விற்பதற்கு எதிராக போராட்டம்

(நுவரெலியா)



நுவரெலியா தபால் நிலையத்தை சுற்றுலா நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கான ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு அமைவாக தாஜ் சமுத்திரா சுற்றுலா விடுதிக்கு விற்பனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நுவரெலியா பிரதான நகரில் தபால் நிலையத்திற்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், சிவில் செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட நாட்டின் அனைத்து நகரங்களிலும், ஏராளமான தபால் நிலைய ஊழியர்கள் பெருமளவிலானவர்கள் போராட்டத்துடன் இணைந்துடன் போராட்டக்காரர்கள் கறுப்புக் கொடி காட்டிய வண்ணம் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## இந்த ஆண்டில் இதுவரை சுமார் 5 ஆயிரம் பேர் கண்தானம்

### தேசிய கண் மருத்துவ சங்கம் தெரிவிப்பு




(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் 5156 பேர் கண் தானம் செய்துள்ளதாக தேசிய கண் மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 977 இலங்கையர்கள் மற்றும் 2468 வெளிநாட்டவர்கள் 3445 பேருக்கு கண் மாற்று சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக கண் மருத்துவ சங்கத்தின் செயலாளர் சம்பத் டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் பல்வேறு விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் 606 கண்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அதில் 118 பேருக்கு இந்நாட்டிலும் 326 வெளிநாட்டவர்களுக்கும் கண் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு உள்ளூர் நன்கொடையாளர்களால் கண்கள் வழங்கப்படுவது பெரும்பாலும் அந்தந்த நாடுகளின் அதிக தேவை காரணமாக இருப்பதாகவும், இலங்கையில் கண்கள் தேவைப்படும் நோயாளிகளுக்கு முன்னுரிமை அளித்து இந்த பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்

நாடளாவிய ரீதியில் கண் சிகிச்சை சங்கத்தினால் கடமையாற்றப்பட்டுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் படி, நாட்டின் சனத்தொகையில் பத்து வீதத்திற்கும் அதிகமான மக்கள், அதாவது இருபத்து இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தமது கண்களை ஏனிர வைப்பதாக உறுதிமொழி வழங்கியுள்ளதாகவும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

## இலங்கையில் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல்-ஜூலிசங்

(கொழும்பு)

உரிய நேரத்தில் தேர்தல் இடம்பெறுவது ஜனநாயகத்திற்கு மிக அவசியம் என்பதனால் இலங்கையில் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அத்தோடு இலங்கையின் அரசமைப்பின்படி ஏனைய தேர்தல்களும் இடம்பெறும் என அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளதாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.



அந்தவகையில் அடுத்த வருடம் நடைபெறவேண்டிய தேர்தல் சுதந்திரமான, நியாயமானதாக இடம்பெறும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும், முதலீட்டைஈர்ப்பதற்கானமுயற்சிகள் பற்றி இலங்கை ஜனாதிபதியுடன் தான் கலந்துரையாடியதாகவும் அமெரிக்க தூதுவர் தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாரதம்

## ஹமாஸ் போராளிகளுக்கு மலேசிய பிரதமர் ஆதரவு



(கோலாலம்பூர்)

ஹமாஸ் போராளிகளுக்கு மலேசிய மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என மலேசிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போரில் அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகள் இஸ்ரேலை ஆதரிக்கின்றன. பெரும்பாலான அரபு நாடுகள் ஹமாஸ் போராளிகளை ஆதரிக்கின்றன.

ஹமாஸ் போராளிகளை ஆதரிக்கும் வெளிநாட்டு அமைப்புகளுக்கும் அரசாங்கங்களுக்கும் எதிராக அமெரிக்க பாராளுமன்றம் கடந்த வாரம் தீர்மானம் இயற்றியது.

இந்நிலையில், இது குறித்து மலேசிய பாராளுமன்றத்தில் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் கருத்து தெரிவிக்கையில்,

மலேசிய மக்கள் ஹமாஸ் போராளிகளுக்கு ஒருங்கிணைந்து ஆதரவளிக்க வேண்டும். இனவெறியை எதிர்த்து ஆபிரிக்க மக்களுக்காக போராடிய நெல்சன் மண்டேலாவை போல் ஹமாஸ் போராளிகள் தங்கள் மக்களுக்காக போராடி வருகின்றனர்.

அமெரிக்கா எனும் தனி நாடு கொண்டு வந்துள்ள தீர்மானத்திற்கோ, அச்சுறுத்தலுக்கோ நான் அஞ்சப் போவதில்லை. ஐக்கிய நாடுகள் சபை எடுக்கும் முடிவுகளைத்தான் நாங்கள் அங்கீகரிப்போம் என திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

காசாவின் மீதான இஸ்ரேல் தாக்குதலை "காட்டுமிராண்டித்தனம்" என அன்வர் சில தினங்களுக்கு முன் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இஸ்ரேல், ஹமா[ஸ்] போர்க்குற்றங்களு[க்கு]...

## ஐ.நா மனித உரிமை[...]

(நியூயோர்க்)

**இஸ்ரேல், ஹமாஸ் இரண்டுமே போர்க்குற்[...] பொறுப்பு என்று ஐக்கிய நாட்டு நிறுவன மனித உரி[...] தலைவர் வோல்கர் டர்க் தெரிவித்தார்.**



ராஃபா எல்லைக்குச் சென்றிருந்த அவர்.

அந்த எல்லைப் பாதை 2.3 மில்லியன் மக்களுக்கு உயிர்நாடியாக இருப்பதாகவும் பொதுமக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவது சட்டவிரோதமானது என்றும் டர்க் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் 7 ஆம் திகதி ஹமாஸ் குழு நடத்திய தாக்குதல்களையும் அதற்குப் பாலஸ்தீனர்களை ஒட்டுமொத்தமாகத் தண்டிப்பதும் போர்க்குற்றம்

## இஸ்ரேலில் பாலஸ்தீனர்களுக்கு பதிலாக இந்தியர்களை பணிக்கமர்த்த முடிவு



(ஜெருசலேம்)

இஸ்ரேல்-ஹமாஸ் படையிடையே போர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதால் இஸ்ரேலில் உள்ள பாலஸ்தீனர்களை உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டது.

பாலஸ்தீனர்களுக்குப் பதிலாக 1 இலட்சம் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க இஸ்ரேல் முடிவெடுத்துள்ளது.

இஸ்ரேலில் சுமார் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் பணியாற்றி வருகின்றனர். போர் தொடங்கியதும் இவர்களின் பணி உரிமத்தை இஸ்ரேல் இரத்து செய்து விட்டது. உடனடியாக அங்கு வேலை பார்த்து வந்த பாலஸ்தீனர்கள் வெளியேறிவிட்டனர்.

இதையடுத்து வேலை வாய்ப்பு கொள்கைகளில் இஸ்ரேல் அரசு திருத்தம் கொண்டு வந்து மாற்றி அமைத்தது. இதன் மூலம் சுமார் 1 லட்சம் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க இஸ்ரேல் முடிவு செய்துள்ளது. கட்டுமான பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் இதற்கான பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும் இஸ்ரேல் கட்டுமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹமாஸுக்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது. ஐ.நா சபையில் இஸ்ரேல் போர் நிறுத்தம் தொடர்பாக கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவிக்காமல் இந்தியா புறக்கணித்தது. இஸ்ரேலிடம் இருந்து இராணுவ படைகளுக்கான ஆயுதங்களை இந்தியா கொள்முதல் செய்து வருகிறது.

இப்படி இந்தியாவுடன் நட்புணர்வோடு திகழ்ந்து வரும் இஸ்ரேல் தற்போது பாலஸ்தீனர்களுக்கு பதில் இந்திய தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடிவு செய்துள்ளதால் இருதரப்புக்கு இடையேயான உறவு மேலும் வலுப்பெறும் நிலை உருவாகி இருக்கிறது. (நி-5-6)

### இங்கிலாந்தில்

## தீபாவளிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட பிரதமர் ரிஷி சுனக்

(லண்டன்)

தீபாவளிப்பண்டிகை நாளை மறுதினம் கொண்டாடப்பட உள்ளது. இந்நிலையில் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் மற்றும் அவரது மனைவி அக்‌ஷதா மூர்த்தி ஆகியோர் நேற்று முன்தினம் 10 டவுனிங் தெருவில் இடம்பெற்ற தீபாவளி சிறப்பு வரவேற்பில் தீபாவளி விளக்குகளை ஏற்றி வைத்தனர்.

இதில் இந்திய புலம்பெயர்ந்தோர், பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழில்முனைவோர் மற்றும் பாலிவுட் பிரபலங்கள், இந்துக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

"தீபாவளி என்பது நம் அனைவருக்கும் மற்றும் எங்கள் குடும்பங்களுக்கு நம்பமுடியாத சிறப்பு வாய்ந்த நேரம். ஆனால் எனக்கு இப்போது, கடந்த ஆண்டு இந்த முறை பிரதமராக ஆனதற்கான அற்புதமான நினைவுகளையும் இது கொண்டு வருகிறது" என இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் இதன்போது தெரிவித்தார்.

அதேவேளை இங்கிலாந்து பிரதமர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ எக்ஸ் சமூகவலைத்தளத்தில், புகைப்படங்களை பகிர்ந்து, உலகம் முழுவதும் தீபாவளி கொண்டாடுபவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ாஸ் இரண்டுமே
## ருக்குப் பொறுப்பு
### மைப் பிரிவுத் தலைவர்

### ற்றங்களுக்குப்
### உரிமைப் பிரிவுத்



என்றும் அவர் குறிப்பிட்டிருந் தார்.

இந்நிலையில், அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கக்குழு, பொதுமக்களுக்கும் நிவாரண உதவியாளர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளது.

நிவாரணப் பொருட்களை ஏந்திய வாகனம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அது அந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அதனால், காசா நகரத்தில் இருக்கும் பல மருத்துவ மனைகளுக்குச் செல்ல வேண்டிய மருத்துவப் பொருட்களின் விநியோகம் தடைப்பட்டது.

ஒரே ஒரு மருத்துவ மனைக்கு மட்டுமே உதவிப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டன.

பாலஸ்தீன அகதிகளுக் கான ஐக்கிய நாட்டு நிவாரணப் பணி அமைப்பு, காசாவில் 90 இற்கும் மேற்பட்ட அதன் ஊழியர்கள் உயிரிழந்தது தெரிவித்தது. (நி-5-6)

# சிரியா மீது அமெரிக்கா வான் தாக்குதல்-9 பேர் பலி



(வோஷிங்டன்)

பயங்கரவாதிகளை குறிவைத்து சிரியா மீது அமெரிக்கா நடத்திய வான்தாக்குதலில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

மத்திய கிழக்கு பகுதிகளில் உள்ள பெரும்பாலான நாடுகளில் ஈரான் ஆதரவு பெற்ற ஆயுதம் ஏந்திய பயங்கரவாத குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. ஈராக், சிரியா உள்ளிட்ட நர்டுகளில் பயங்கரவாதிகளை ஒழிப்பதற்காக அமெரிக்கா தனது துருப்புகளை நிறுத்தியுள்ளது.

அமெரிக்க வீரர்கள் தங்கியிருக்கும் வீடுகள் மற்றும் இராணுவ நிலைகள் மீது ஈரான் ஆதரவு பயங்கரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள். நடத்தப்படும் தாக்குதலுக்கு அமெரிக்காவும் பதிலடி கொடுத்து வருகிறது.

அந்த வகையில் சிரியாவில் ஈரான் ஆதரவுடன் செயற்பட்டு வரும் பயங்கரவாத குழுக்களின் நிலைகள் மீது அமெரிக்கா வான் தாக்குதல் நடத்தியது. இதில் 9 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இரண்டு அமெரிக்க எஃப்-15 போர் விமானங்கள் சிரியாவில் குண்டுமழை பொழிந்ததாக, அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் லாய்டு ஆஸ்டின் தெரிவித்துள்ளார்.

மேலும், அமெரிக்க அதிகாரிகளின் பாதுகாப்பை விட உயர்ந்தது ஏதும் எல்லை என ஜோ பைடன் தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் அமெரிக்காவின் இரண்டாவது தாக்குதல் இதுவாகும். கடந்த மாதம் 17 ஆம் திகதியில் இருந்து அமெரிக்க துருப்புகள் மீது குறைந்தது 40 முறையாவது தாக்குதல் நடத்தியிருப்பார்கள் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. (நி-5-6)

# காசாவில் இஸ்ரேல் இராணுவத்தால் 130 சுரங்கங்கள் அழிப்பு



(காசா)

காசாவில் தரைவழி தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் தொடங்கியதிலிருந்து இதுவரை ஹமாஸ் போராளிகளால் உருவாக்கப்பட்டுள்ள 130 சுரங்கப் பாதைகள் அழிக்கப்பட்டுள்ளன.

அங்கு சண்டையிட்டு வரும் வீரர்களுடன் இஸ்ரேல் இராணுவத்தின் பொறியாளர்கள் குழுவும் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழு, மற்ற வீரர்களுடன் இணைந்து காசாவிலுள்ள ஹமாஸ் போராளிகளின் சுரங்க நிலைகள் மற்றும் ஆயுதங்களை அழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

அந்தக் குழுவினர் சுரங்க நிலைகளின் இருப்பிடங்களைக்கண்டறிவது, அதனை வெடிவைத்து தகர்ப்பது ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இஸ்ரேல் இராணுவத்தின் தரைவழித் தாக்குதல் நடவடிக்கை பூமிக்கு அடியில் ஹாமஸ் போராளிகள் அமைத்துள்ள உட்கட்டமைப்பை தகர்த்து வருகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

# சிலியில் தீ விபத்து 14 பேர் உயிரிழப்பு




(சாண்டியாகோ)

சிலி நாட்டின் தெற்கு நகரமான கொரோனலில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சிக்கி 8 சிறுவர்கள் உட்பட 14 பேர் பலியாகியுள்ளனர்.

சிலியிற்கு சட்ட விரோதமாக குடியேறியவர்கள் அமைத்த மரத்தால் ஆன வீடுகளில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸாரும் மீட்புக்குழுவினரும் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில், அடுப்பில் சமையல் செய்யும் போது தீப்பற்றி, மர வீடுகளுக்கு பரவியதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)

### அமெரிக்காவின்
# ஆளில்லா விமானத்தை வீழ்த்திய ஹௌத்தி

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஆளில்லா விமானமொன்றை ஏமனின் ஹௌத்தி கிளர்ச்சியாளர்கள் சுட்டு வீழ்த்தியுள்ளனர் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் எம்கியு9 ரீப்பர் ஆளில்லா விமானத்தையே ஹௌத்தி கிளர்ச்சியாளர்கள் சுட்டுவீழ்த்தியுள்ளனர். இந்த ஆளில்லா விமானம் ஏமனின் கரையோர பகுதியில் சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளது.

ஹௌத்தி கிளர்ச்சியாளர்கள் சவுதிஅரேபிய ஆதரவு குழுவிற்கு எதிராக 2015 முதல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மேலும் ஹௌத்தி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆதரவு வழங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆட்சியில் பெண்களுக்கு முன்னுரிமை

## சஜித் திட்டவட்டம்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் பெண்களின் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாடு அபிவிருத்தியடைய வேண்டுமானால் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும் என்று நிபுணர்கள் கூறினாலும் நமது நாட்டில் பெண் தொழிலாளர் எண்ணிக்கை 32 சதவீதம்தான். இதில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

பெண்களுக்கு முறையான ஊதியத்துடன் மகப்பேறு விடுப்பு வழங்குவதில் பெண்களின் உரிமைகள் வலுப்பெறுகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் பெண் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்காக தனியான வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும்.

கல்வி ஒரு நல்லொழுக்கமுள்ள, மேம்பட்ட மற்றும் ஞானமுள்ள நபரை உருவாக்கும் போது சுகாதார கட்டமைப்பு அந்நபரின் ஆயுட்காலத்தை அதிகரிப்பதால், கல்வி மற்றும் சுகாதாரத் துறையில் பாரிய புரட்சி ஏற்படுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது.

ஆரம்ப காலத்திலிருந்தே பெண்களின் ஆரோக்கியத்திற்கு நியூசிலாந்து ஸ்கொட்லாந்து போன்ற நாடுகள் முன்னுரிமை அளிப்பது போல் நாமும் எமது ஆட்சியில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குவோம் எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (நி-5-6)

# மின்தடை தொடர்பான முறைப்பாடுகளை டிஜிட்டல் முறையில் அனுப்புமாறு அறிவிப்பு

(கொழும்பு)

மின் தடை தொடர்பான முறைப்பாடுகளை டிஜிட்டல் முறையில் அனுப்புமாறு இலங்கை மின்சார சபை, பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் நோயல் பிரியந்த தெரிவிக்கையில் சீரற்ற காலநிலையில் ஏற்படும் மின் தடைகள் தொடர்பான முறைப்பாடுகளை CEB Care மொபைல் அப்ளிகேஷன் அல்லது 1987 அழைப்பு நிலையத்தின் சுய சேவை மற்றும் IVR அமைப்பு போன்ற டிஜிட்டல் வழி முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டும்.

சீரற்ற காலநிலை காரணமாக மின் தடைகள் தொடர்பில் அழைப்பு நிலையங்களுக்கு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எனவே, டிஜிட்டல் முறைகளைப் பயன்படுத்தி முறைப்பாடுகளை அனுப்பு மாறு நுகர்வோரை இலங்கை மின்சார சபை கோரியுள்ளது.

மேலும், இலங்கை மின்சார சபை தற்போதுள்ள நிலைமைகளை கருத்தில் கொண்டு மின்தடைகளை விரைவில் மீளமைக்க 24 மணிநேரமும் செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 450 |
| தக்காளி | 250 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 |
| கோவா | 350 | 300 | 400 |
| கரட் | 400 | 350 | 400 |
| பூசணி | 100 | 80 | 100 |
| புடோல் | 250 | 200 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 250 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 270 | 300 |
| பாகற்காய் | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 250 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 160 |
| பயிற்சிங்காய் | 400 | 350 | 350 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 150 | 140 | 250 |
| கறிமிளகாய் | 500 | 350 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 500 |
| போஞ்சி | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 350 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 550 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 500 |
| முள்ளங்கி | 100 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 150 |

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2963

விதுரன்

ஓடி ஓடி பணத்தை சம்பாதித்த பிறகு!
திரும்பி பாத்தா.
எங்கடா இங்க இருந்த என் வாழ்க்கைய காணோம்.



நந்தன்

தீபாவளிக்கு ஆகுற செலவ பாக்குறப்ப...



கிருஷ்ணர் நரகாசுரனை மன்னிச்சு விட்டுருக்கலாம்னு தோனுது

தவனேஷ்

போராடி கொண்டே இரு வெற்றி உன்னை தேடி வரும்.
சாகுற வரையுமான்னு கேளு




நர்மதா

வெயில் காலத்துல ஜூஸ் கடைல கூட்டமா இருக்கும்.
மழை காலத்துல டாக்டர்ட்ட கூட்டமா இருக்கும்.



பதுமிதன்

முன்பு போல் பண்டிகை நாட்களில் ஆர்வம் இல்லை.
வயதாவதற்கான அறிகுறி.




அபிஷா

என்ன சார் தீபாவளி வந்தாச்சா?
எங்களுக்கு தீபாவளி கிடையாதுங்க.
பங்காளி ஒருத்தர் தவறிட்டார்.
ஓ சாரி... யாரு?
ம்ம்.. நரகாசுரன்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிரான போராட்டத்திற்கு அணி திரளுங்கள்

## சிறீதரன் எம்.பி அழைப்பு



(கிளிநொச்சி)

பொன்னாவெளியில் சீமெந்து தொழிற்சாலை அமைப்பதற்காக மேற்கொள்ளப்படும் சுண்ணக்கல் அகழ்வுக்கெதிராக தமது இருப்பை நிலை நிறுத்தப் போராடும் பொன்னாவெளி மக்களின் போராட்டத்திற்கு வலுச்சேர்க்க அனைவரையும் அணி திரளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிரான 100 ஆவது நாள் மக்கள் போராட்டம் கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில், பாலாவி மற்றும் அனைத்து மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வேரவில் மருத்துவமனை முன்பாக இடம் பெறவுள்ளது.

இப்போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் அனைத்து தரப்பினரையும் அணி திரளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# யாழ்.மாவட்டத்தில் மழையால் ஏழு குடும்பங்கள் பாதிப்பு

(அராலி)

யாழ்.மாவட்டத்தில் மழையால் இதுவரை ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 7 வீடுகள் பகுதிய ளவில் சேதமடைந்துள்ளதாகவும் யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப்பணிப்பாளர் ரி.என்.சூரிய.ராஜா தெரிவித்துள்ளார்.

இதுவரையான மழை வீழ்ச்சி குறித்து வினவும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்,

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொலிகண்டி கிழக்கு பகுதியிலேயே இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு இது வரைக்கும் 836.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன் நேற்று முன் தினம் இரவு 8.11 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவித்தார். (நி-5-6-33-104)


## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை** :- பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
**விண்ணப்பதாரரின் பெயர்** :- உருத்திரகுமாரன் பெண் சந்திரகாந்தா
**சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் :-**
**முகவரி:-ஆதன இல:** புதிய பதிவு, **வீதி** :- புத்தடி வீதி, **வட்டாரம்-05**

வட்டாரம் 5, புத்தடி வீதியில் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று வடலியடைப்பு இறை "புலித்துவக்கி" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 2 1/2 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் மல்வம் உடுவிலைச் சேர்ந்த செல்லத்துரை செல்வராசாவும் பெண் செல்வராணி மற்றும் மானிப்பாய் நாகராசா விஜயநாதனும் பெண் வசந்தாதேவி ஆகியவர்களால் "50 வருடங்களுக்கு முன்னர் எங்கள் தாயார் வீரகத்தி கதிர்காமு பெண் நாகமுமாவின் சீதன ஆதனமாகவிருந்து அவர் காலஞ்செல்ல எங்களில் 2 ஆம் 4 ஆம் பேரை வந்தடைந்த மாதா வழி முதுசமும் ஆட்சிபுமானதென்றும் அவரின் பின் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இது எங்கள் ஆட்சியிலேயே இருந்து வருகின்றது" என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் அவர்களால் 13184 ஆம் இலக்க 07.09.2011 ஆம் திகதிய உறுதி எழுதப்பட்டுள்ளது. பின்னர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு. கதிர்காமநாதன் அவர்களால் எழுதப்பட்ட 13185 ஆம் இலக்க 07.09.2011 ஆம் திகதிய உறுதி மூலம் குலவீரசிங்கம் முருகதாஸிற்கும் பெண் ஜெயலதாவுக்கும் அறுதி விற்கப்பட்டு அதன் பின் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா அவர்களால் எழுதப்பட்ட 8162 ஆம் இலக்க 06.06.2018 ஆம் திகதிய உறுதி மூலம் நாகராஜா விஜயநாதனுக்கும் பெண் வசந்தாதேவிக்கும் அறுதி விற்கப்பட்டுள்ளது. குறித்த இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா அவர்களால் எழுதப்பட்ட 9188 ஆம் இலக்க 28.11.2020 ஆம் திகதிய உறுதி மூலம் அவர்களது அற்றோனிக் தத்துவக்காரரான திலகமலர் மணியசேகரம் மூலம் மாணிக்கம் சுப்பிரமணியம் பெண் மனோன்மணி என்பவர்களுக்கு அறுதி விற்கப்பட்டு, பின்னர் பிரசித்த நொத்தாரிசு பரமநாதன் திலக்ஷனா அவர்களால் எழுதப்பட்ட 1454 ஆம் இலக்க 24.09.2022 ஆம் திகதிய உறுதி மூலம் அவர்களது அற்றோனிக் தத்துவக்காரரான சுப்பிரமணியம் கபிலன் மூலம் உருத்திரகுமாரன் பெண் சந்திரகாந்தா என்பவருக்கு அறுதி விற்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நிலஅளவையாளர் S.கனகராசன் அவர்களால் வரையப்பட்ட 1529 ஆம் இலக்க 30.07.2012ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் "புலித்துவக்கி" நிலப்பரப்பு 2 குளி 09.80 எனவும் நில அளவையாளர் A.அதீதன் அவர்களால் வரையப்பட்ட 0195ஆம் இலக்க 17.04.2021 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் "புலித்துவக்கி" நிலப்பரப்பு 02 குளி 09.27 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு,

வடக்கு - இராசதுரை சசீந்திரனும் ராசதுரை தர்மசீலனும்
கிழக்கு - நந்தகுமார் பெண் கலாதேவி
தெற்கு - சிவபாதம் பெண் சரஸ்வதி
மேற்கு - ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை **உருத்திரகுமாரன் பெண் சந்திரகாந்தா** என்ற பெயரில் சபையின் ஆதனப் பதிவேட்டில் பதிவு செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு சபையின் ஆதனப் பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப் பெயர் பதிவு செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்,

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.** (7822)


# கைதான 38 இந்திய மீனவர்கள் விடுதலை

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து இரு வேறு சம்பவங்களின் போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 38 இந்திய மீனவர்களும் மன்னார் நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இரு வேறு சம்பவங்களின்போது கடற்படையினரால் கைதான 38 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன் போது குறித்த மீனவர்களுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் மன்றில் முன்வைக்கப்பட்டது.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 6 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த மீனவர்களுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

குறித்த 5 படகுகளின் உரிமையாளர்களும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு நீதிவான் இந்திய துணைத்தூதரகம் ஊடாக படகு உரிமையாளர்களுக்கு அறிவிக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் விடுதலை செய்யப்பட்ட 38 மீனவர்களும் மிகிரியாகம தடுப்பு முகாமிற்கு அனுப்பப்பட்டு இந்திய தூதரக அதிகாரிகள் ஊடாக நாட்டிற்கு அனுப்பி வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி-5-6-285)

# மன்னாரில் புனரமைக்காத நிலையில் காணப்படும் வீதிகள்



(மன்னார்)

மன்னார் நகர் பகுதியில் வைத்திய சாலை-தாழ்வுபாடு வீதி, மன்னார் தலைமன்னார் வீதி,சாந்திபுரம் வீதி, கோந்தை பிட்டி வீதி, தபாலகம் தொடக்கம் மன்னார் பிரதான புகையிரத நிலைய வீதி, எழுத்தூர் தரவான் கோட்டை வீதி, மன்னார் வவுனியா வீதி என எந்த வீதிகளும் ஒழுங்கான முறையில் பூரணப்படுத்தப்படாதவாறு இருப்பதாக பயன்படுத்தும் மக்கள் தெரிவித்தனர்.

குறித்த வீதி அபிவிருத்தி செயற்பாடு சம்பந்தமாக மாவட்ட பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் குறித்த வீதிகளூடாக பொதுமக்கள் பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் தெரிவித்தனர். (நி-5-6-285)



கிளிநொச்சியில் விழுதுஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கான செயலமர்வு நேற்று வட்டக்கச்சியில் அமைந்துள்ள விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. (படம்:-யதுபாஸ்கரன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 331





"என் பாட்டனார் என்னிடம் எவ்வளவு பிரியம் வைத்திருந்தாரோ, அவ்வளவு நான் அவரிடம் பக்தி வைத்திருந்தேன். ஆதலின் அவருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு நடப்பதென்று உறுதி கொண்டேன். ஆனாலும் என் உள்ளத்தில் அமைதி இல்லை. கடல் சூழ்ந்த தீவில் கரடிக்கு இரையாகாமல் என்னைக் காப்பாற்றிய கரையர் குலமகளின் கதி என்ன? சோழ நாட்டுச் சிம்மாசனத்தில் கீழ்க்குலத்தில் பிறந்த ஊமைப் பெண் ஒருத்தி ராணியாக வீற்றிருக்க முடியுமா? அரண்மனை வாழ்வு அவளுக்குத்தான் சரிப்பட்டு வருமா? நாட்டார் நகரத்தார் என்னைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்களா? இந்த எண்ணங்கள் அடிக்கடி தோன்றி என் மனத்தைச் சஞ்சலப்படுத்தின. இது மட்டுமன்று, என் பெரிய தகப்பனார் கண்டராதித்தர் சில காலத்திற்கு முன்புதான் இரண்டாவது கலியாணம் செய்து கொண்டிருந்தார். அவரை மணந்த பாக்கியசாலி மழவரையர் குலமகள் என்பதை நீ அறிவாய். முதல் மனைவிக்குக் குழந்தை இல்லையென்றால், இரண்டாவது மனைவிக்கும் குழந்தை பிறவாது என்பது என்ன நிச்சயம். பெரியப்பாவுக்கு ஆண் குழந்தை பிறந்தால், இராஜ்யம் எனக்கு எப்படி வரும்? இதைப் பற்றி ராஜ்யத்தில் சிலர் அப்போதே பேசிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. ஆனால் அத்தகைய சந்தேகம் யாருக்கும் உண்டாகக்கூடாது என்று மகாத்மாவாகிய என் பெரிய தகப்பனார் விரும்பினார் போலும். பராந்தக சக்கரவர்த்தி காலமான பிறகு கண்டராதித்தருக்கு இராஜ்ய பட்டாபிஷேகம் நடந்தது. அதே சமயத்தில் எனக்கும் யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடக்க வேண்டும் என்று என் பெரியப்பா புதிய சக்கரவர்த்தி ஏற்பாடு செய்துவிட்டார்.

"என் பிரிய மகளே! இன்றைக்கு உன் தம்பி அருள்மொழியின் பேரில் இந்நாட்டு மக்கள் எப்படிப் பிரியமாயிருக்கிறார்களோ, அப்படி அந்த நாளில் என்பேரில் அபிமானமாயிருந்தார்கள். அரண்மனைக்குள்ளே பட்டாபிஷேகம் நடந்து கொண்டிருந்தபோது வெளியிலே ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆவலுடன் காத்திருந்தார்கள். புதிதாக முடிசூடிய சக்கரவர்த்தியும், யுவராஜாவும் சேர்ந்தாற்போல் ஜனங்களுக்குக் காட்சி தரவேண்டும் என்று அனைவரும் விரும்பினார்கள். அவ்விதமே பெரியப்பாவும், நானும் இந்த அரண்மனை மேன்மாடத்தின் முன்றிலுக்கு வந்து நின்றோம், கீழே ஒரே ஜன சமுத்திரமாக இருந்தது. அவ்வளவு பேருடைய முகங்களும் மலர்ந்து விளங்கின. எங்களைக் கண்டதும் அவ்வளவு பேரும் குதூகலமடைந்து ஆரவாரித்தார்கள். நாம் இளவரசுப் பட்டம் சூட்டிக் கொண்டது பற்றி இவ்வளவு ஆயிரமாயிரம் மக்கள் குதூகலம் அடைந்திருக்கிறார்களே, அப்படியிருக்க, எங்கேயோ ஒரு கண் காணாத் தீவில் காட்டின் மத்தியில் வாழும் ஊமைப் பெண்ணை பற்றி நாம் கவலைப்படுவது என்ன நியாயம்? இவ்வளவு பேருடைய மகிழ்ச்சி முக்கியமானதா? ஒரே ஒரு ஊமைப் பெண்ணின் வாழ்க்கை முக்கியமானதா?

"இவ்வாறு எண்ணிக் கொண்டே எங்களை அண்ணாந்து பார்த்தபடி நின்ற மலர்ந்த முகங்களை ஒவ்வொன்றாகக் கவனித்து கொண்டு வந்தேன். அந்த ஜனங்களிலே ஆண்களும் பெண்களும், முதியவர்களும் இளைஞர்களும், சிறுவர் சிறுமிகளும் நின்றார்கள். எல்லோரும் ஒரே களிப்புடன் காணப்பட்டார்கள். ஆனால் திடீரென்று ஒரு முகம், ஒரு பெண்ணின் முகம், சோகம் ததும்பிய முகம், கண்ணீர் நிறைந்த கண்களினால் என்னைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்த முகம், தெரிந்தது. அத்தனைக் கூட்டத்துக்கு நடுவில், எப்படி அந்த ஒரு முகம், என் கண்ணையும் கவனத்தையும் கவர்ந்ததென்பதை நான் அறியேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வருமுன் காப்போம்



தேரிக்குடியிருப்பு என்ற ஊரின் எல்லையில் இருந்த காட்டில் பெரிய குளம் இருந்தது, அதனை ஒட்டி சிறிய நீரோடை ஓடிக் கொண்டிருக்கும்.

அந்த குளத்தில் நிறைய மீன்கள், நண்டுகள், மற்றும் அனைத்து நீர்வாழ் இனங்கள் வாழ்ந்து வந்தன. அவற்றில் ராமு, சோமு, தாமு என்ற மூன்று மீன்கள் நல்ல நண்பர்களாக இருந்தார்கள், அந்த மூவரும் எங்கே சென்றாலும் ஒன்றாகவே போவார்கள். ஒரு பயமும் இல்லாமல் சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள்.

அவர்கள் மகிழ்ச்சியை கெடுக்கும் விதமாக ஒரு நாள் மாலையில் ஒரு இரண்டு மனிதர்கள் அங்கே வந்தார்கள், வேட்டையாடிய களைப்பு முகத்தில் தெரிந்தது, குளத்து நீரை அருந்தி விட்டு, குளத்தை நன்றாக ஆராய்ந்தார்கள், பின்னர் அவர்களில் ஒருவர் "இந்த குளத்தில் நிறைய மீன்கள் இருக்கிறதே, அதுவும் நன்றாக வளர்ந்து கொழு கொழு என்று இருக்கிறதே, நாம் வீணாக காடு மேடு என்று அலைந்து வேட்டையாட வேண்டாம், பேசாம இங்கே நாளை வந்து வலையை விரிப்போம், மாட்டிக் கொள்ளும் மீன்களை விற்று பணம் சம்பாதிக்கலாம்" என்றார். மற்றவரும் "ஆகா, அருமையான யோசனையாக இருக்கிறதே" என்றார்.

இவர்கள் பேசுவதை கேட்ட ராமு என்ற மீன் பெருங்கவலை அடைந்தது, உடனே தன் நண்பர்களான சோமு, தாமுவிடம் கூறியது. காட்டின் நடுவில் இருந்ததால் இதுவரை பெரிய ஆபத்து வந்தது இல்லை, குளத்தில் நடுவில் போய் இருந்தால் பறவைகள் கூட தங்களை ஒன்றும் செய்தது இல்லை, இன்றோ இந்த மனிதர்களால் பெரிய ஆபத்து வந்து விட்டதே என்ன செய்யலாம் என்று யோசித்தன.

ராமு எப்போவும் வரும் முன் காத்துக் கொள்ளும் மனம் படைத்த மீன், மற்ற மீன்களைப் பார்த்து, நாளை கண்டிப்பாக அவர்கள் இங்கே வருவார்கள், நாம் இன்று இரவே இக்குளத்தை விட்டு நீரோடையின் உதவியால் அருகில் இருக்கும் வேறு குளத்திற்கு போகலாம். சில காலம் போனபின்பு மீண்டும் இங்கே வரலாம் என்றது.

ராமுவின் நல்ல யோசனையை மற்ற இருவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் சும்மா சொல்லிவிட்டு போயிருப்பார்கள், அவர்களாவது நம்மை பிடிப்பதாவது, நீ வீணாக பயப்படுகிறாய் என்றன.

ராமு எவ்வளவோ சொல்லிப் பார்த்தது, ஆனால் சோமு,தாமு இருவரும் கேட்கவில்லை. ராமு அவர்களிடம் மன்னிப்பு கேட்டு விட்டு தான் இன்று இரவே அந்த குளத்தை விட்டு போவதாக சொல்லி விட்டு இரவே தப்பி வேற குளத்திற்கு போய் விட்டது.

மறு நாள் காலையில் சோமு, தாமு இருவரும் கூடி பேசினார்கள், மீன் பிடிப்பதாக சொன்னவர்களை காணவில்லை, சும்மா பேச்சு சொன்னதை நம்பி ராமு வேற குளத்திற்கு போனது முட்டாள்த்தனம் என்று கேலி செய்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைகளுக்கு இடையே
உண்மை வெற்றி பெறும்.
- ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எமது எதிர்காலச் சந்ததியை காப்பாற்ற முன்வாருங்கள்

யூத இன மக்களிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் நிறையவே உண்டு. வேற்று நாட்டு யுத்தம் காரணமாக யூதர்கள் மிகுந்த அவலங்களைச் சந்தித்தனர். புலம்பெயர்ந்தனர். ஆனால் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் யூதர்களாகவே வாழ்ந்தனர்.

ஆம், உரிமைக்காகப் போராடுகின்ற இனத்தின் தனித்துவத்தைச் சிதைப்பதற்கு பல்வேறு முயற்சிகளை எதிரிகள் முன்னெடுப்பர்.

அதிலும் குறிப்பாக இனத்துவ சிந்தனையில் இருந்து அந்த இனக் குழும மக்களை திசை திருப்புவதற்கான ஏற்பாடுகளே அதிகமாக இருக்கும்.

இதில் ஓர் இனத்தின் கலை கலாசார பண்பாட்டை - அந்த இனத்தின் ஒழுக்கவிழுமியங்களைச் சிதைப்பதன் மூலம் இனப்பற்றுதலில் இருந்து அந்த இனத்தின் எதிர்காலச் சந்ததியை வேரறுக்க முடியும் என்ற நியமத்தின் அடிப்படையில் எதிரிகள் செயற்படுவர்.

இதற்கு எம் தமிழினம் நல்லதோர் உதாரணம். ஆம், ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் என்பது உலக வரலாற்றில் படிக்க வேண்டிய கட்டாய பாடம்.

அதிலும் விடுதலைப் போராட்டத்துக்காக எம் இளைஞர், யுவதிகள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்ததை இந்த உலகம் நிச்சயம் மீள்வாசிப்புக்கு உட்படுத்தும்.

நிலைமை இதுவாக இருக்கையில், எம் தமிழினத்தின் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கையைச் சீரழித்து அவர்களை இனப்பற்றற்றவர்களாக ஆக்குகின்ற முயற்சிகள் நம் தமிழர் தாயகத்தில் பலமுனைகளில் நடந்தாகின்றன.

இந்த சதித்திட்டம் இன்று நேற்று ஆரம்பமானதல்ல. 2009ஆம் ஆண்டு விடுதலைப் போராட்டம் மௌனித்த பின்பு தமிழர் தாயகத்தில் களியாட்ட நிகழ்வுகளை படையினரே ஏற்பாடு செய்தனர்.

இதுதவிர, போதைப் பாவனையை நம் மண்ணில் விதைக்கின்ற சதித்திட்டம் கனகச்சிதமாக நிறைவேற்றப்பட்டது.

அதிலும் மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருட்களை விற்பனை செய்கின்ற கொடுமை அரங்கேறியபோது, நம் மக்கள் விழித்துக் கொண்டதால், அந்த நாசகாரம் தடுத்து நிறுத்தப்பட்டது.

எனினும் இன்னமும் போதைப் பொருள் பாவனை கட்டுக்கடங்காமல் இருப்பதை நாம் மறந்து விடக்கூடாது.

நிலைமை இதுவென்றிருக்கையில், இப்போது விடுதிகளில் களியாட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நம் இளம் சந்ததியைப் பாழாக்கும் சதித்திட்டங்கள் அரங்கேற்றப்படுகின்றன.

எனவே இதுவிடயத்தில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் விழிப்பாக இருப்பது காலத்தின் கட்டாய தேவையாகிறது.

அதேநேரம் நம் மண்ணில் இருக்கக்கூடிய விடுதிகளின் உரிமையாளர்கள் இது விடயத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து நம் இனத்தைக் காப்பாற்றுவதற்கு முன்வர வேண்டும்.

இல்லையேல் எங்கள் எதிர்காலம் மிகப் பெரும் ஆபத்தை எதிர்கொள்ளும் என்பதுடன் தமிழினத்தின் அடையாளமும் மெல்ல மெல்லச் சிதைந்து போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# மன்னாரில் காற்றாலை மின்நிலையம் அதானி குழுமத்துடன் புதிய ஒப்பந்தம்

(கொழும்பு)

மன்னார் படுகையில் 250 மெகாவாட் திறன் கொண்ட புதிய காற்றாலை மின் நிலையத்தை அமைப்பதற்காக, இந்தியாவின் அதானி குழுமத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் பணி விரைவுப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மின்சக்தி அமைச்சு இதற்கான நடைமுறையினை விரைவுபடுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன்படி இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து உடன்படிக்கைகளையும் கைச்சாத்திடுவதற்கு அமைச்சு தயாராக உள்ளது.

2009 மின்சார சட்டத்தின்படி, எந்த ஒரு தனியார் நிறுவனமும் உள்ளூர் மின் உற்பத்திக்கு ஒரு கேள்விப் பத்திர செயல்முறையைப் பின்பற்ற வேண்டும்.

ஆனால் இந்த திட்டம், இரண்டு அரசுகளுக்கு இடையிலான திட்டம் என்ற அடிப்படையில், கேள்விப் பத்திர முறை பின்பற்றப்படவில்லை.

இந்தநிலையில் 30 வருடங்களுக்கு செய்து கொள்ளப்படும் இந்த உடன்படிக்கையின் கீழ், உற்பத்தி செய்யப்படும் ஒரு மின்சார அலகு 46 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

### கிரிக்கெட் குழப்பத்தின் பின்னணியில்

## இந்தியாவின் ஆதிக்கம்?

### விமல் சந்தேகம்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் குழப்பத்தின் பின்னணியில் இந்தியாவின் ஆதிக்கம் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கிரிக்கெட் விளையாட்டில் இந்தியாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. ஐ.சி.சி தலைவர் தனியார் விமானத்தில் வருகை தந்து, ஜனாதிபதி மற்றும் சாகல ரத்நாயக்கவை சந்தித்துள்ளார்.

இதன்போது, இலங்கை கிரிக்கெட் சபைக்கு உள்ள அநாவசிய அழுத்தங்களை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார் என எமக்கு தெரியவந்துள்ளது.

அவரைப் பொறுத்தவரை இலங்கைக் கிரிக்கெட் சபையை பாதுகாக்க வேண்டும்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இடம் பெற சிறிது காலத்திற்கு முன்னர் எதற்காக எல்.பி.எல் போட்டியை நடத்த வேண்டும்.

இதனால்தான் சிறந்த வீரர்கள் காயமடைந்தார்கள். உலகக் கிண்ண தொடரிலும் இவர்களால் விளையாட முடியாமல் போனது.

ஐ.சி.சி யின் தலைவர்தான் எல்.பி.எல் போட்டியை உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இடம் பெற சிறிது காலத்திற்கு முன்பாக நடத்துமாறு இலங்கை கிரிக்கெட் சபைக்கு பணித்தாரோ தெரியவில்லை” என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

### கடலில் அதிக பிளாஸ்ரிக் பொருட்கள்

## 14 ஆவது இடத்தில் இலங்கை

### சுற்றாடல் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கடலில் அதிகளவான பிளாஸ்ரிக் பொருட்களை கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை 14 ஆவது இடத்தில் உள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஆறுகள் மற்றும் நீரோடைகள் மூலம் சுமார் 9 ஆயிரத்து 700 மில்லியன் மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் பொருட்கள் கடலில் சேர்வதாக இதுவரை பதிவான தரவுகளில் தெரியவந்துள்ளது.

சுற்றாடல் அமைச்சில் “பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தகவல் தொடர்பால் திட்டம்” நேற்று முன்தினம் அமைச்சின் கேட்போர் கூடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட போதே இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது.

சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க, தெற்காசிய சுற்றாடல் ஒத்துழைப்புத் திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் ரொக்கியா கார்ல்டன் ஆகியோர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

கடலில் உள்ள மீன்களின் அளவை விட பிளாஸ்ரிக்கின் அளவு அதிகரித்து வருகிறதென சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க தெரிவித்தார். (நி-5-6)

### இந்தியா-இலங்கை

## கச்சதீவு தொடர்பில் இணக்கப்பாடு தெளிவுபடுத்துமாறு ஐ.ம.ச கோரிக்கை

(கொழும்பு)

இந்தியா வழங்கியுள்ள கடனை இரத்து செய்து கொள்வதற்காக இலங்கையின் வடக்கு கடல் எல்லை மற்றும் கச்சதீவு பகுதி உள்ளிட்ட விவகாரம் தொடர்பில் அந்நாட்டுடன் அரசு ஏதேனும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதா என்பது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

இந்திய மீனவர்களுக்கு வடபகுதிக்கு வருவதற்கு 'பாஸ்' நடைமுறை வழங்குவது தொடர்பில் பேச்சு நடத்தப்படுகின்றது என்று பிரதமர் தினேஷ் குணவர்தன இந்திய ஊடகமொன்றுக்கு அறிவித்திருந்தார்.

அதேபோல இலங்கைக்கு கச்சதீவை வழங்குவதற்கு இந்திராகாந்தி எடுத்த நடவடிக்கை வரலாற்று தவறு என இந்திய பிரதமர் அண்மையில் அறிவித்ததையும் ஊடகங்கள் வாயிலாக அறியமுடிந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவிற்கும் சென்றிருந்தார்.

எனவே, வடக்கு கடல் எல்லை குறித்தும் கச்சதீவு குறித்தும் இந்திய கடனை இரத்து செய்து கொள்வதற்காக ஏதேனும் உடன்பாட்டுக்கு வந்துள்ளார்களா? என்ற சந்தேகம் அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது. அதை தெளிவுபடுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை** யாழ் பிரதேசத்தில் கட்டுடை, கட்டுடை SSRகட்டடத்தொகுதி, அரசடி, பிப்பிலி சந்தி மானிப்பாய் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி ,பொன்னாவெளி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மடுகந்த டெலிகாம், மலையா பருத்திக்குளம் ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

**“நீங்கள் வலிமை,பொறுமை ஆகிய வற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்”**

-ஹால் போர்லாண்ட் (அமெரிக்க இயற்கையியலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



## அமரர் நாகமுத்து நாகலிங்கம்

**திதி : துவாதசி**

குடும்பத்தின் குல விளக்கே
ஆண்டு பதினைந்து போனாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
விட்டு அகலவில்லை ஐயா!

வீசும் காற்றினிலும்
நாம் விடும் மூச்சினிலும்
எட்டு திக்குகளிலும் உங்கள்
நினைவால் வாடுகின்றோம் ஐயா!

உங்கள் இழப்பை ஈடு செய்ய
முடியாமல் தவிக்கின்றோம்
மீண்டும் பிறந்து வருவீரா
எம் அன்பு ஐயாவே!

உங்கள் இழப்பால் எம் விழியோரம்
கசியும் கண்ணீர்த் துளிகளை
உங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

அவர்களின் சிராத்த தினம் இன்று (10.11.2023) 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அராலி தெற்கு,
காளிகோவிலடி

குடும்பத்தினர்
077 555 8485

(17823)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்வாயில்...

ராணி (வயது-89) என்ற மூதாட்டி கடந்த ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி வீட்டில் இருந்து சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

வீட்டில் சடலம் காணப்பட்டதை அடுத்து நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி பி.வாசுதேவா மேற்கொண்டார்.

மூதாட்டியின் இறப்புத் தொடர்பில் சந்தேகம் இருப்பதால் உடற்பாகங்கள் பெறப்பட்டு இரசாயன பகுப்பாய்வுக்காக அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

பகுப்பாய்வு அறிக்கையில் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருந்த நெல்லியடிப் பொலிஸார் அவ் வீட்டில் இருந்த கணவன் மனைவியாகிய 28 மற்றும் 32 வயதுடையவர்களையும் வேலைக்கார யுவதியான 19 வயதுடையவரையும் கைது செய்துள்ளனர். (ம-7,60)

## தும்பளையில்...

பகல் நலன்புரித் திட்டப் பணம் பெறுவதற்காக வீட்டில் இருந்து சென்றபோது தும்பளை மணியகாரன் சந்திப் பகுதியில் அவர் மயங்கி விழுந்துள்ளார்.

உடனடியாக மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## 9 வருடங்களின்...

யில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கிளிநொச்சி பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சடலம் மீட்கப்பட்ட பகுதிக்கு அயலில் உள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்கள அலுவலகத்தில் வேலை செய்த மரணித்தவரின் காதலனான எதிரியினை கொலைக்குப் பயன்படுத்திய கத்தி மற்றும் மரணித்தவர் இறுதியாக வைத்திருந்த கைத்தொலைபேசி மற்றும் உடைகள் என்பவற்றுடன் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியிருந்தனர்

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கிளிநொச்சி மேல் நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்து வழக்கு தொடரப்பட்டு நேற்று குறித்த வழக்கானது கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.ஏ.சகாப்தீன் முன்னிலையில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எதிரிக்கு தீர்ப்பு வாசித்துக் காட்டப்பட்டதுடன் எதிரியின் இறுதிக் கருத்தும் கேட்டதை தொடர்ந்து குறித்த மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.(ம-7,315)

## வடக்கு - கிழக்கு...

விடுத்துள்ளது.

இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுவதால், எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை விடுமுறை வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முந்தைய வருடங்களிலும், விடுமுறை நாட்களில் தீபாவளி தினம் வருமேயானால் திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

எனினும், இந்த வருடம் வடக்கு - கிழக்கு பாடசாலைகள் தொடர்பில் இந்த விடயத்தில் எதுவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

இது மாணவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும் எனவும் வட மாகாண தமிழ் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

## சுவஸ்திகாவுக்கு...

திகா கொழும்பில் பொது அரங்கு ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் 'பாசிசவாதிகள்' என்று தெரிவித்து உரையாற்றியிருந்தார்.

அவரின் அந்தக் கருத்துக்கு எதிராக உள்நாட்டில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பல கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த ஒக்டோபர் 31ஆம் திகதி அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் சட்டத்தரணி சுவஸ்திகா "நெருக்கடியான காலத்தில் நீதித்துறையின் சுதந்திரம்" என்ற தலைப்பில் உரையாற்ற இருந்தார்.

இந்த உரை இறுதி நேரத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஒரு பிரிவினரின் நெருக்குதலின் காரணமாகக் கைவிடப்பட்டது.

இதையடுத்து சட்டத்தரணி சுவஸ்திகாவை மீளவும் அழைத்து சட்டத்துறையிலே தனது உரையை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை உருவாக்க யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக நிர்வாகம் ஆகியன இணைந்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று முன்தினம் அறிக்கை விடுத்திருந்தது.

இந்த அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முற்பகல் 10 மணியளவில் பல்கலைக்கழக விஞ்ஞான பீட வளாகத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டது. அதில் "சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் வெளியிட்ட கருத்தான 'பாசிச புலிகள்' என்ற கருத்துடன் எமது ஆசிரியர் சங்கத்துக்கு உடன்பாடில்லை.

எமது நிர்வாகக் குழுவின் தீர்மானத்துக்கு அமைவாக சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கத்தின் உரை யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 31.10.2023 அன்று நிறுத்தப்பட்டமை தொடர்பான ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையை வாபஸ் பெறுகின்றோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதையடுத்து தமது போராட்டத்தை வெற்றியுடன் நிறைவுக்குக் கொண்டு வந்தனர் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தால் நேற்று வெளியிடப்பட்டிருந்த அறிக்கை தொடர்பில் ஆசிரியர் சங்கத்துக்குள்ளேயே எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன எனத் தெரிய வருகின்றது.(ம-7,33,104)

## நிபுணர் குழுவின்...

தயாரிக்கப்பட்டு புதிய விளையாட்டு சட்டம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தற்போதைய சட்ட கட்டமைப்பு மற்றும் விளையாட்டு நிர்வாகத்தின் தற்போதைய கட்டமைப்பை ஆராய்ந்த பின்னர், ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட இந்த நிபுணர் குழு அறிக்கையின் முதன்மையான பரிந்துரைகளில் ஒன்று, தற்போதுள்ள சட்டத்தை முழுமையாக மாற்றுவதற்கு தேசிய விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழுவை நிறுவுவதாகும்.

விளையாட்டுக்கள் தொடர்பான கொள்கை தயாரிப்பு மற்றும் மேற்பார்வை செய்யும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

8 அடிப்படை நோக்கங்களை அடைய இந்த தேசிய விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழுவை அமுல்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் பதவிக்காலம் 4 வருடங்களாகும், அதற்காக விளையாட்டுத்துறை அமைச்சர் நியமனங்களை அரசியலமைப்பு சபைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ம-7)


கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3535
சீட்டிழுப்பு திகதி 09.11.2023
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 08 56 66 71
V
60999
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.11.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1323
Y 05 46 58 61 Y
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
Double Chance 38659

நிதி 09.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0119
Lucky 7
L7 இலக்கம் 0 2
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
மேஷம் 8 9 9 3 4 1

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.09
சீட்டிழுப்பு இலக்கம் 0602
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
கும்பம் 04 05 20 33 கும்பம்
12843 தேசிய லொத்தர் சபை 11

மெகா பவர்
திகதி 09/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1641
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
L 18 07 26 29 77
Double Chance 76437
www.nlb.lk

மஹஜன சம்பத
திகதி 2023/11/09
சீட்டிழுப்பு இலக்கம் 5293
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
X 6 7 3 6 5 3
தேசிய லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 09.11.2023 வெற்றி வாரம் 001 வர்ணம் ஊதா
சுபிரி தன சம்பத
P 6 7 6 8 2 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 20,642,694.40
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2267 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.11.09 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
02 26 50 66 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,337,532/-
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

திகதி 2023.11.09 வெற்றி வாரம் 4428 வர்ணம் சிவப்பு
சனிதா
வெற்றி இலக்கங்கள்
03 09 67 73 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,335,272.00
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3979 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.09 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் விருச்சிகம்
12 14 23 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,557,356/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 25 24 36 52 53
சுப்பர் இலக்கம்
1443
2023.11.09
வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 462,980,104.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி: 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2093
வர்ணம் : இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.11.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,942,360/-
ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
01 12 15 42 Y


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




BOC Travels
SUBSIDIARY OF BANK OF CEYLON

# BOC Travels (Pvt) Ltd

(SUBSIDIARY OF BANK OF CEYLON)

இன்று **15** ஆவது அகவையில்

# BOC Travels Jaffna Branch

இலங்கை வங்கியின் பிரயாண சேவை நிறுவனமானது கடந்த 14 வருட காலமாக குறைந்த செலவு, வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் பொறுப்பு மிக்க உலகத் தரத்திலான வெளிநாட்டுப் பயண சேவைகளை வழங்கி வருகிறது.

**இத் தருணத்தில் அன்பும் பெருமதிமிகு வாடிக்கையாளர்கள், நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**எமது சேவைகள்**

- அனைத்து நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்கள்
- அனைத்து நாடுகளிற்குமான வீசா ஒழுங்குபடுத்தல்கள்
- அனைத்து நாடுகளிற்குமான பிரயாண காப்புறுதிகள்
- அனைத்து நாடுகளிற்குமான சுற்றுலா வசதிகள்
- தென்னிந்திய திருத்தல யாத்திரை ஒழுங்குகள்

இது ஓர்
இலங்கை வங்கியின்
துணை நிறுவனம்

(C-7590)

1 ஆம் மாடி இலங்கை வங்கி மேற்தரக்கிளை,
ஆஸ்பத்திரி வீதி,
(வேம்படிச்சந்தி அருகாமை)
யாழ்ப்பாணம்.

021 222 4575/021 222 4576
whatsapp / Viber-
070 384 9335/ 070 395 1794

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் [illegible] மேற்படி முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.